யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 02 திங்கட்கிழமை (18-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 253

# இலங்கைவிமானப்படையில் விமானிகள் பற்றாக்குறை!

## பெண்களையும் சேர்த்துக்கொள்ள விமானப்படைத்தளபதி நடவடிக்கை

கொழும்பு, ஒகஸ்ட் 18

இலங்கை விமானப் படையில் விமானிகளுக்குப் பெரும் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய நூறு விமானிகளாவது தேவை என்றும்--இலங்கை விமானப் படையில் பெண் விமானிகளும சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் என்றும் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா தெரிவித்தார்.

எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா "சன்டே ஒப்சோவர்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

தற்போது வடக்குக்கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தில் பணியாற்ற விமானப் படைக்கு மேலும் நூறு விமானிகள் தேவைப்படுகின்றனர் எனவும்-

இவ்வெற்றிடங்களை நிரப்பும்போது பெண்களும் பங்கு பற்றலாம் எனவும் அவர் கூறினார்.

1995இல் இருந்து இதுவரை சுமார் 25 விமானிகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான பயணிகளுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு இன்று முதல் மூன்று விமானச் சேவைகள் இடம்பெறுகின்றன.

இவற்றில் செல்ல பதிவு செய்தவர்களை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

(இ-3)

## முருங்கனில் படையினர் தாக்குதல்

கொழும்பு, ஓக 18

மன்னார் முருங்கனில் இரு விடுதலைப் புலிகளை சுட்டுக் கொன்று அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இருவரின் சடலங்களையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் புலிகளிடம் ஒப்படைக்க இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-3-5)

முச்சந்தி முரளி



அப்ப கப்பல் ஓடினாலும் பயணிகளுக்கு இப்போதைக்கு இல்லைப் போல......!

## எந்த ஒரு நிலைமையையும் சமாளிக்க படையினர் தயார்!

### கப்பல் சேவை குறித்து பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஓக. 18

"வட பகுதிக்கான பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் சேவையில் ஈடுபடும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் அதனால் எழுகின்ற நிலைமையைச் சமாளிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தயாராக இருக்கின்றனர்".

பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் வட பகுதிக்கான பயணிகள் கப்பல் சேவையையும், அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லும் கப்பல் சேவையையும் தொடர்ந்து சீர் குலைக்க திட்டமிட்டுள்ளார்கள் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் நோக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுமார் 5 லட்சம் மக்களின் அடிப்படைத் தேவைகளை இல்லாமல் செய்வதாகும்.

அரசாங்கம் இந்த முட்டுக் கட்டைக்கு மத்தியிலும் யாழ்ப்பாண மக்களுக்குத் தொடர்ந்து உணவுப் பொருள்களை வழங்க உறுதி பூண்டுள்ளது.

அதேசமயம் பயணிகள் கப்பல் சேவையும் யாழ்ப்பாணத்துக்கு தொடர்ந்து நடத்தப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 28 இலங்கைத் தமிழர் கனடாவில் கைது!

கொழும்பு, ஓக. 18

கனடாவில் பல கொள்ளைகளில் சம்பந்தப்பட்டதாக 28 இலங்கைத் தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அண்மைக்காலமாக அங்கு இடம்பெற்று வந்த கொள்ளைகள் தொடர்பாக விசாரணை நடத்தி வந்த பொலீஸார் இவர்களைக் கைது செய்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் தொடர்ந்து விசாரிக்கப்படுகின்றனர்.

இக்கொள்ளைகள் இலங்கையில் உள்ள தமிழ்க் குழுக்களுடன் தொடர்பற்றவை என்றும்—

தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டவை என்றும்— பொலீஸ் இன்ஸ்பெக்டர் நோல் தெரிவித்துள்ளார்.

## யாழ். வரக் காத்திருந்த 17 பேர் திருமலை தனியார் விடுதியில் கைது

திருகோணமலை, ஓக. 18

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதியின்றி திருகோணமலை பெரியகடைப் பகுதியில் அமைந்திருந்த தனியார் விடுதியில் தங்கியிருந்த 17 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலைப் பிரதேச செயலக அதிகாரி ஒருவரால் நடத்தப்பட்ட இந்த விடுதியில் தங்கியிருந்த இவர்கள் தங்குமிட பதிவு இல்லாத காரணத்தாலேயே பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வயோதிபர் உட்பட குழந்தைகள் வரையான இந்த 17 பேரும் திருமலை நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு அடுத்த வாரம் வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

அந்த விடுதியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டிருந்தனராயினும் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(இ-150-3)

## விடைத்தாள் திருத்த சென்று தெல்லிப்பழையுடன் திரும்பிய ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 18

தற்சமயம் நடைபெறும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிக்காகக் கொழும்பு செல்வதற்காகக் கப்பலில் பயணம் செய்யச்சென்ற ஆசிரியர்கள், தெல்லிப்பழையுடன் திரும்பினர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் இந்தப் பணிக்காகத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களில் ஒரு தொகுதியினர், குறுகியகால அறிவித்தலுடன் மன்னாருக்குக் கப்பலில் செல்ல நேற்று யாழ். ரயில் நிலையத்துக்குச் சென்றனர்.

அங்கு சோதனைகள் யாவும் முடிந்து பஸ்ஸில் இவர்கள் தெல்லிப்பழை வரை சென்றனர்.

மன்னாருக்குச் செல்லும் கப்பல் ரத்துச் செய்யப்பட்டதாக அங்குவைத்து அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் ஏமாற்றத்துடன் யாழ். நகர் திரும்பினர்.

எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும் விடைத்தாள் மதிப்பிடும் பணிக்குச் சமுகமளிக்கும் வகையில் விமானத்தில் இடம் வழங்கும்படி அவர்கள் கோரி உள்ளனர்.

(இ.3)

## அகதிகளை முதலில் அனுப்பிய பின் பயணிகளை அனுப்ப நடவடிக்கை

### 3வாரம் செல்லும் என்கிறார் மன்னார் அரச அதிபர்

மன்னார் ஓக. 18

மன்னார் நகரில் தற்பொழுது தங்கி உள்ள அகதிகள் 3 வார காலத்துக்குள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர். அதன் பின்னரே பயணிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். இப்படி மன்னார் அரச அதிபர் குறூஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் செல்வதற்காக மன்னாரில் தங்கியுள்ள அகதிகளை கப்பல் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கம் கேட்டுள்ளது.

அவர்களை மூன்று வாரத்துக்குள் அனுப்பி முடிக்கலாம் என நம்புகிறேன்.

அதன் பின்பு மன்னாருக்கு வந்துள்ள மற்றும் பயணிகள் கப்பல் மூலம் அனுப்பப்படுவர்.

அத்துடன் வன்னியில் இருந்து மன்னாருக்கு [illegible] அனுமதிக்கும் பணியும் ஆரம்பிக்கும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

## படையினர் ஷெல் வீச்சு; 2 பொதுமக்கள் பலி!

மன்னார், ஓக. 18

மன்னார் உயிலங்குளம் பகுதியில் இருந்து படையினர் நேற்று முன்தினம் காலை மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் இரு பொது மக்கள் கொல்லப்பட்டனர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

நிக்கலஸ் அன்ரனி (24 வயது — காத்தான் குளம்),

பேதுரு செபமாலை (34

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் - மாணவர் 70 பேர் இன்று மன்னார் புறப்படுகின்றனர்

## அங்கிருந்து கப்பலில் காங்கேசன் வருவர்

திருகோணமலை, ஓக. 18 வசதியின்றி யாழ்ப்பாணம் கடந்த 2 மாத காலமாக திரும்ப முடியாத நிலையில் திருகோணமலையில் கப்பல் இருந்த ஆசிரியர்கள், மாணவர்கள் 70 பேர் இன்று மன்னாருக்குப் புறப்படவிருக்கின்றனர்.

மாகாணசபை கல்வியமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா எடுத்தமுயற்சியின் காரணமாக இவர்கள் மன்னாரில் இருந்து கப்பலில் காங்கேசன்துறை செல்ல விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நடந்த தமிழ்த்தின, விளையாட்டுப் போட்டிகளுக்கு இவர்கள் சென்றிருந்தனர்.

திருமலையில் தங்கியுள்ள மேலும் 39 ஆசிரியர்களும் தனியார் பஸ்மூலம் மன்னார் செல்லவிருக்கின்றனர்.

(இ-3-150)


மீண்டும் ஆரம்பம்...

D. M. I.

A/L வர்த்தக வகுப்புக்கள்

| | |
|---|---|
| வர்த்தகம் | - B. பசில் |
| கணக்கீடு | - D. SAM |
| பொருளியல் | - R. இராஜேஸ்வரன் |
| வணிகப் புள்ளிவிவரவியல் | - T. தவசேகர் |
| அளவையியல் | - பிரபல ஆசிரியர் |

அனுமதிகளை முன்கூட்டியே பெற இடம், நாள், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

- D SAM

(49068)


## மரண அறிவித்தல்கள்

### இராமசாமிக் குருக்கள் சொர்ணம்மா

அனலைதீவு, ஐயனார் கோயில் முன்னாள் பிரதம குருக்கள் அமரர் இராமசாமிக்குருக்களின் அன்பு மனைவி சொர்ணம்மா 1997-08-13 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

தகனக் கிரியைகள் அனலைதீவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்,
[கண்ணன்]

ஐயனார் கோயில்,
அனலைதீவு.

(49066)

### கந்தையா பூத்துரை

கந்தையா பூத்துரை 17-08-1997 அன்று காலமானார்.

இவர் செல்லமணியின் அன்புக் கணவரும், றேமன் (சவுதி அரேபியா), பேபி, மோகன், சுவிதா, காலஞ்சென்ற செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யஸ்ரினின் மாமனாரும், டொன்சிக்காவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18-08-97 இன்று பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மோகன்
(மகன்)

803, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

(49061)

### யோண் டானியல மோசேஸ்

(ஓய்வு பெற்ற இலிகிதர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

மயிலாகத்தைப் பிறப்பிடமாகவும் பழம்றோட் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட J D மோசேஸ் 16-08-97 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், றீற்றாவின் அன்புக்கணவரும், பொன்மலர், ஜெயராசா (கொழும்பு) ஜெயமலர் (ஜேர்மனி), இன்பமலர், ஜீவமலர் (ஆசிரியை, யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை) செபமலர் (பிரான்ஸ்), நவமணர் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற ஜோசேப், ஞானம்மா, ஆசீர்வாதம் மற்றும் நேசம்மா (கொழும்பு), மதிதாயஸ் (கணக்காளர், கொழும்பு). அருட்திரு: புரூணோ (அமெரிக்கா), டேவிற் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்ரனி (அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், திருகோணமலை) ஜெனிற்றா, பகவத்சிங், ஜெயராசா (இத்தாலி), மகிழ்ராஜதுரை (சீமெந்து கூட்டுத்தாபனம். காங்கேசன்துறை), ஆகியோரின் மாமனாரும், பமிலா, சர்மிலா, டொனால்ட் ஊர்மிலா, டினேஸ், பிரசன்னா, மடோனா, மரினா, சரோமினி, சிரோமினி, டொறின், ஜெனுசன், தனுசன், சோபன், யூலியான், டிலிசியா, சணா, சஜிவ், சரோன் சோபியான், பிறின்சி, மரினா, பேனாட்விதுஷன் ஆகியோரின்பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு அவரது இல்லத்தில் 18-8-97 இன்று 2-00 மணிக்குநடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோ. றீற்றா
(மனைவி)

75, பழம்றோட்,
ஆனைக்கோட்டை.

(49067)

## தராகி இன்று திருமலை வந்து சேரும்

மன்னாருக்கும் — திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் 'தராகி' கப்பல் இன்று திருகோணமலைக்கு வந்துசேரும் என்று திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் வி வேலும் மயிலும் தெரிவித்தார்.

கப்பலுக்குத் தேவையான எரிபொருள்களையும், சிப்பந்திகளுக்கு தேவையான உணவுப் பொருள்களையும் ஓரிரு தினங்களில் எடுத்துக் கொண்டு இக்கப்பல் மீண்டும் காங்கேசன்துறைக்கு செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் இக் கப்பல் தரித்து நிற்கும் நேரத்தில் துறைமுக அதிகாரிகள் கப்பலின் சேவைத்தரம் குறித்து சோதனைகளை மேற்கொள்வர். (இ-3-150)

## பொறியியலாளர் குழு கப்பல்களைப் பரிசோதிக்கும்

திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபட வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள இரு கப்பல்களையும் எதிர்வரும் வியாழக்கிழமை பொறியியலாளர் குழு பரிசோதனை செய்ய விருக்கிறது.

கொழும்புத் துறைமுகத்தில் வைத்து இக்கப்பல்கள் 40 மைல் தூரத்தில் செல்ல தகுதியுடையவையா?

அக்கப்பல்களில் பயணிகள் பயணம் செய்ய வசதிகள் உள்ளனவா? என்பன குறித்து அக்குழு ஆராயும்.

அந்தக் கப்பல்கள் சேவையில் ஈடுபட தகுதியானவை என்று சிபார்சு செய்யும் பட்சத்தில் அடுத்த வாரத்தில் இருந்து இவை சேவையில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி பெரியமாவடி முருகமூர்த்தி ஆலயத்தில் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரால் இன்று திருவாசக முற்றோதல் நடாத்தப்படவுள்ளது. (ஐ-117)

★ ★ ★

அனலைதீவு மகாகணபதி பிள்ளையார் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியைகள் நேற்று முதல் ஆரம்பமாகின. வியாழனன்று எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.

மகா கும்பாபிஷேகக் கிரியைகள் ஊரெழு சிவஸ்ரீ பால. வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இன்று முதல் மாலை3மணி தொடக்கம் 4 மணி வரை தினசரி "குமாரசம்பவம்" பற்றிய தொடர் விரிவுரை பண்டிதர் மு. கந்தையாவால் நிகழ்த்தப்படும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெறும்.

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அம்மன் கோயில்களில் இன்று பூரணை தின திருவிளக்கு— சுமங்கலி பூசைகள், வழிபாடுகள் நடைபெறும்.

கொழும்புத்துறை மணவியம்பதி ஸ்ரீ அம்மன் —ஐயனார் கோயில், உரும்பிராய் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் ஆலயம், புலோலி ஸ்ரீ பர்வத வர்த்தனி சமேத பகபதீஸ்வரர் ஆலயம், அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றில் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனையை அடுத்து திருவிளக்கு — சுமங்கலிபூசை வழிபாடுகள் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கைதடி-நாவற்குழி அருள்மிகு ஸ்ரீ வைரவர் சுவாமி கோயிலில் இன்று நண்பகல் 12 மணிக்கு மண்டலப்பூர்த்தி விழா விசேட அபிஷேகம் பூசை, ஆராதனை இடம்பெறும். (இ-30)

★ ★ ★

சாவகச்சேரி — கல்வயல் அருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்(புலுட்டையன் பிள்ளையார் கோயில்) தின்புனராவர்த்தன பஞ்ச குண்டபக்ஷ மகாகும்பாபிஷேக விழாவையொட்டி இன்று மாலை6 மணி தொடக்கம் 8 மணிவரை விநாயக வழிபாடு, கர்மாரம்பம், அனுக்ஞை, திரவியசுத்தி தனபூசை என்பன நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில்

# மீன்பிடிப்புக்கான கடல் எல்லையை விஸ்தரிப்பது குறித்து ஆராயப்படும்

கொழும்பு, ஓக. 18

யாழ். மீனவர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்தில்மீன் பிடிப்பதற்கான கடல் எல்லையை விஸ்தரிப்பதுகுறித்து ஆராய்வதற்கான விசேட கூட்டம் எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் யாழ். நகரில் நடைபெறும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்

1995 ஆம் ஆண்டு 'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ். நகர் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்தது.

இதையடுத்து மீனவர்கள் யாழ். நகருக்குள் வந்தனர். எனினும் பெரும் எண்ணிக்கையான மீனவர்கள் யாழ். நகருக்குள் வரவில்லை.

இதனால் யாழ். மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த கடல் எல்லை அப்பொழுது போதுமானதாக இருந்தது.

இவர்கள் குறிப்பிட்ட கடல் எல்லைப் பகுதியில் மட்டுமே மீன்பிடிக்க வேண்டிய நிலை இருந்தது.

எனினும் தற்போது யாழ். நகருக்குள் சுமார் 20 ஆயிரம் மீனவர்கள் வரை குடியேறியுள்ளனர்.

இதனால் குறிப்பிடப்பட்ட கடல் எல்லைக்குள் மீனவர் மீன்பிடிப்பதில் சிக்கல்கள் எழுகின்றன.

அத்துடன் மாதகல் முதல் தொண்டமானாறு வரையான கடற்கரைப் பிரதேசத்தில் மீன்பிடிப்பது பாதுகாப்புக் காரணங்களால் தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டதுடன்கடல் எல்லை விஸ்தரிப்பின் தேவை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடற்தொழில் அமைச்சிலும் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


யூனிவேர்சல்
கந்தர்மடம்

A/L 98
ORGANIC CHEMISTRY
ஆரம்பம்: 20-08-1997
Wed Sat Sun.
6-15 a.m.
ஆசிரியர்;
திரு. சிவத்திரன்
B. Sc. (Hons)

A/L 99
THERMO CHEMISTRY
விரைவில் ஆரம்பம்.

(49070)

யூனிவேர்சல்
கந்தர்மடம்

A/L 98
கணக்கியல்
"ஒப்படைக் கணக்கு"
ஆரம்பம்: 19-08-1997
செவ்வாய் 4 00 p.m.
வெள்ளி 3-00 p.m.
ஆசிரியர்:
[illegible]

(49069)


## கலாசாலை ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக: 18

ஆசிரியர் கலாசாலை இறுதித்தேர்வில் சித்தியடையாத அனைத்து ஆசிரியர்களையும் இம்மாதம் 22 ஆம் திகதிக்கிடையில் அலுவலக நேரத்தில் தம்மைச் சந்திக்கும்படி பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்கள் கோரி உள்ளனர். (இ)

## ஒருவர் காயம்

ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகி பழுதடைந்த நிலையில் இருந்த வீட்டைத் திருத்தி அமைப்பதற்கான வேலையில் ஈடுபட்டிருந்த நால்வரில் ஒருவர் சார மரம் முறிந்து கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

கோப்பாய் மதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சண்முகம் (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கொடுப்பனவு

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரம் குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக்கான கொடுப்பனவு ரூபா ஐயாயிரம் வழங்கப்பட்டுள்ளது. (இ.103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் பொருள்களை பலஸ்தீனியர் பகிஷ்கரிப்பு!

மேற்குக்கரை, ஓகஸ்ட் 18
பலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேல் விதித்துள்ள தடைகளுக்குப் பதிலடி நடவடிக்கையாக அந்நாட்டின் பொருள்களைப் புறக்கணிக்கப் போவதாக பலஸ்தீன நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஜெருஸலேமில் 'ஹமாஸ்' தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் பல தடைகளை விதித்தது.

பலஸ்தீனத் தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்குமாறு இஸ்ரேலியப் பிரதமர் நதனியாகு விடுத்த வேண்டுகோளை அதிபர் யஸீர் அரபாத் நிராகரித்துவிட்டார்.

இதேவேளை—

பலஸ்தீன நிர்வாகத்துக்கு நிதி வழங்கும் நடவடிக்கையை இஸ்ரேல் தாமதித்து வருவது அமைதி முயற்சிக்கு எந்த வகையிலும் உதவாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்காவின் அதிருப்தி தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாக வெள்ளைமாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிவித்தார்.

கடந்த மாதம் ஜெருஸலேமில் நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதல்களைத் தொடர்ந்து சுங்கவரிப் பணத்தை இஸ்ரேல் நிறுத்தி வைத்துள்ளது. மேற்குக்கரை காஸா பகுதிகளை இஸ்ரேல் மூடியிருக்கின்றது. அத்தடைகள் முறையற்றவை என பலஸ்தீன அதிகாரிகள் கண்டித்துள்ளனர். (ஐ-5)

## அமெரிக்கா செல்ல ஜெரி அடம்ஸுக்கு 'விஸா'

வாஷிங்டன், ஓக. 18

ஐரிஷ் கெரில்லாக்களின் அரசியல் பிரிவான சின்பீன் தலைவர் ஜெரி அடம்ஸுக்கு அமெரிக்க அரசு விஸா வழங்கியுள்ளது.

கடைசியாக ஐரிஷ் கெரில்லாக்கள் பிரகடனம் செய்துள்ள யுத்த நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்தே இவ்வாறு விஸா வழங்கப்பட்டிருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதன் மூலம் ஜெரி அடம்ஸ் அமெரிக்கா வருவதற்கும், அங்கு நிதிசேகரிப்பதற்கும் தடையேதும் இல்லை என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மடலின் ஆல்பிறைற் அம்மையார் தெரிவித்தார்.

'விஸா' அனுமதி கிடைத்திருப்பதை அடுத்து ஜெரி அடம்ஸ் அடுத்த மாதம் அமெரிக்கா செல்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விடுதலையானோர் மீண்டும் கைது!

சென்னை, ஓக: 18

1993 ஆம் ஆண்டு இந்து சமுத்திரக் கடற்பகுதியில் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவுடன் ''எம். வி. அகத்'' என்றகப்பலில் பயணஞ் செய்த சமயம் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஒன்பது சிப்பந்திகளும் கடந்த வெள்ளியன்று நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டு பின்னர் சனிக்கிழமை மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்கள் விசாகபட்டினத்தில் உள்ள மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## முன்னாள் சேர்பிய அதிபர் எந்நேரமும் கைதாகலாம்

லண்டன், ஓக. 18

முன்னாள் சேர்பிய அதிபரைக் கைது செய்ய பிரிட்டிஷ், அமெரிக்கா, பிரெஞ்சு வீரர்கள் அடங்கிய நேட்டோப் படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சராஜிவோ ராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி லண்டனில் 'சண்டே ரைம்ஸ்' நாளிதழ் இதனைத் தெரிவித்தது.

அவருடைய கோட்டையாகக் கருதப்பட்ட பாலேயின் மலைப்பகுதியில் கடந்த புதன்கிழமை ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சேர்பிய அதிபரைக் கைது செய்வதற்கான பயிற்சியே அது என 'சண்டே ரைம்ஸ்' கூறியுள்ளது.

சேர்பிய அதிபருக்கு வழங்கப்பட்டு வந்த பொலீஸ் பாதுகாப்பை அகற்றுவது குறித்த உடன்பாட்டில் நேற்றுமுன்தினம் நேட்டோ கைபெழுத்திட்டது.

போர்க் குற்றங்களுக்காகவும், போர்க் கைதிகளை நடத்துவது தொடர்பான ஜெனிவா மாநாட்டுத் தீர்மானத்தை மீறியதற்காகவும் சேர்பிய அதிபர் கைது செய்யப்படவுள்ளார். (ஐ-5)

# கம்போடியாவில் நெருக்கடி மேலும் தீவிரமாகும் அறிகுறி

### சண்டையில் 'கெமரூச்' இணைவு

உலக அரங்கில்

நொம்பென் ஓக 18

கம்போடியாவில் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட இளவரசர் நொரடோம் றணரித்துக்கு ஆதரவான துருப்புகளுக்கும், இரண்டாவதுபிரதமா ஹுன் செனுக்கு ஆதரவான படையினருக்கும் இடையேயான சண்டை தீவிரமடைந்துள்ளது.

வடமேற்குக் கம்போடியாவில் தாய் எல்லைப்பகுதியில் சண்டை தொடர்ந்து நடைபெறுகின்றது. அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கிலான மக்கள் சண்டையிலிருந்து தப்புவதற்காக எல்லை தாண்டி தாய்லாந்து நாட்டிற்குள் சென்று கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஹுன் செனை எதிர்த்துப் போராடுவதற்காக றணரித்தின் ஆதரவுப் படைத் தளபதியுடன் தாங்கள் இணைந்துள்ளதாக 'கெமரூச்' கெரில்லாக்கள் அறிவித்துள்ளனர்

தமது வானொலி சேவை மூலம் இந்த அறிவிப்பை அவர்கள் விடுத்துள்ளனர்.

நாட்டின் வடமேற்குப் பகுதியில் அரசாங்கத் துருப்புகளை எதிர்த்துப் போராடி வரும் இளவரசரின் விசுவாசப் படைகளுடன் 'கெமரூச்' கெரிலாக்கள் கூட்டு இராணுவத் தலைமைப்பீடம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் —

கம்யூனிஸ்டுக்களையும் அவர்களது கைப்பொம்மையான ஹுன் செனையும் எதிர்த்துப்போராட தேசிய எதிர்ப்புப் படைகள் கூட்டு பொது அதிகாரி ஒருவரைத் தெரிவு செய்துள்ளதாகவும் 'கெமரூச்' வானொலி அறிவித்துள்ளது.

தற்போதைய சண்டையில் 'கெமரூச்' கெரில்லாக்கள் நேரடியாக இணைந்து கொண்டிருப்பது கம்போடியாவில் நெருக்கடியை மேலும் தீவிரமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-5)

## படகு விபத்தில் 35 பேர் பலி!

பட்னா, ஓக. 18

இந்தியாவில் பீஹார் மாநிலத்தில் இடம் பெற்ற படகு விபத்தில் குறைந்தது 35 பேர் ஆற்றில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

கோயில் நட்டாற்றில் அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றிச் சென்ற இரண்டு படகுகள் கடந்த வெள்ளிக்கிழமையன்று மூழ்கியபோது இந்த விபத்து நிகழ்ந்தது.

ஒரு படகில் 50 பேரும், மற்றைய படகில் 40 பேரும் இருந்தனர். (ஐ-5)

## முஜிபூர் நினைவுதினம் அனுஷ்டிப்பு

டாக்கா, ஓக.18

பங்களாதேஷின் தந்தை ஷேக் முஜிபூர் ரஹ்மானின் நினைவு தினம் கடந்த வெள்ளியன்று அங்கு அனுஷ்டிக்கப்பட்டது.

குண்டுகளால் துளைக்கப்பட்ட ஷேக் ரஹ்மானின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் நினைவஞ்சலி செலுத்தினர்.

பங்களாதேஷ் பிரதமரும் ஷேக் முஜிபூரின் புதல்வியுமான ஷேக் ஹஸீனா அங்கு மலர் வளையங்களை வைத்து தொழுகை நடத்தினார். (ஐ)

## சீன முடிவு

பீஜிங், ஓக. 18

தாய்வான் நாட்டை அங்கீகரிப்பது என ஆபிரிக்க நாடான சாட் முடிவு எடுத்துள்ளதை அடுத்து சீனா அந்நாட்டுடனான ராஜீக உறவுகளைத் துண்டித்துக் கொண்டது. (ஐ)

## பாகிஸ்தானின் பிரபல பாடகர் மரணம்

இஸ்லாமாபாத், ஓக. 18

பாகிஸ்தானைச் சேர்ந்த பிரபல பாடகரும், இசையமைப்பாளருமான முர்ஷத் சத்தே அலிகான் (வயது 49) லண்டனில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நேற்று முன்தினம் காலமானார்.

ஹவாலிப் பாடல்களைப் பாடுவதில் அலிகான் உலகப் புகழ் பெற்றவர் ஆவார்.

'சங்கம்' என்ற பாடல் தொகுப்புக்காக இவருக்கு இந்தியாவில் பல விருதுகள் வழங்கப்பட்டன.

பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு தொடர்பான சர்ச்சைக்குரிய ''பண்டிற்குயின்'' என்ற படத்துக்கு இவரே இசையமைத்துள்ளார். இந்தியாவிலும், மேற்கு நாடுகளிலும் இவரது இசை பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. (ஐ-5)

## பாப்பரசரின் பிரான்ஸ் விஜயம்

பாரிஸ், ஓக. 18

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எதிர் வரும் 21 ஆம் திகதி முதல் மூன்று நாள்கள் பிரான்ஸ் நாட்டிற்கு விஜயம்செய்யவுள்ளார்.

பாப்பரசரின் விஜயத்தை ஒட்டி பாரிஸ் நகரில 7 ஆயிரம் பொலீஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தலை நகர பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

பாரிஸ் நகரின் மேற்குப் பகுதியில் உள்ள 'பொவ்லோா' பூங்காவில் பாப்பரசர் உரையாற்றுவார். (ஐ)

## நீதிமன்றம் தீர்ப்பு

லொஸ்ஏஞ்சலிஸ் ஓக: 18

பிரிட்டிஷ் வர்த்தகப் பிரமுகர் ஒருவரின் மகளான சீதா வைற் என்பவருக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் தான் சட்டபூர்வமான தந்தை என்று லொஸ் ஏஞ்சல்ஸ் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தீர்ப்பு வழங்கப்பட்ட சமயம் இம்ரான்கானோ அவரது வழக்கறிஞரோ நீதிமன்றத்தில் சமுகமளித்திருக்கவில்லை (ஐ)


## மோட்டார் சைக்கிள் சாரதி தேவை


அனுபவம் வாய்ந்த லைசன்ஸ் உள்ள குடிப்பழக்கமில்லாத Motor Cycle சாரதி உடன் தேவை. சிபாரிசுக் கடிதங்களுடன் உடன் நேரில் வரவும். மாதச் சம்பளம் 2,250 ரூபா மட்டும்.

**Dr. V. A. செல்வரத்தினம்,**
**91, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(49064)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06 — 06 — 1949



உதிர்வு: 18 — 08 — 1995

அமரர்
### றோமாம்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்
(அப்புத்துரை)

அன்பின் தெய்வமே! அறிவின் சிகரமே
கணப்பொழுதில்
ஆறாத்துயரில் எம்மையெல்லாம் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்ட எம் இதயக் கோயிலே!
பாசத்தை அள்ளி வீசிடும் போதிலே
நீங்கள் மறைந்து இரண்டாண்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டகலாது.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை: றோமாம்பிள்ளை
மனைவி: மேரி திரேசா (மணி)
பிள்ளைகள்: ரேவதி, அமலவதி, மில்டன், மெறினா, ஜெறினா, றெஜினா, டெறினா.
மருமக்கள்: அ. யேசு, இ. ராசன்.
பேரப்பிள்ளைகள்: யே. லொறக்ஸன், யே. நிஜேந்தன், ரா. அலிசா, ரா. சியானா.
மாமனார்: எமிலியாம்பிள்ளை
மாமியார்: கிறிஸ்னால்
மச்சான், மச்சான்மார், உற்றார், உறவினர்கள்.

மணல்காடு,
குடத்தனை.

(சி/1338)


## A/L
### பிரத்தியேக வகுப்பு
### கணக்கியல்

98 - கிரயக்கணக்கியல்
99 - ஆரம்பத்திலிருந்து
ஆரம்பம்: 22-08-97
பிற்பகல் 4.00
இடம்: இல. 23,
தபாற்பெட்டி வீதி,
(தாளையடி வீதி)
திருநெல்வேலி.
ஆசிரியர்:
திரு. நித்தியானந்தராஜா
(B. B. A)
(அனுமதி வரையறுக்கப்பட்டவை) (49062)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடந்த சுமார் பத்து ஆண்டு காலமாக

# பண்ணைப்பகுதியில் தேங்கிக் கிடந்த ஆஸ்பத்திரிக் கழிவு அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள ஆஸ்பத்திரி கழிவுகளைச் சேகரிக்கும் பாரிய கிடங்குகளில் கடந்த சுமார் 10 வருடகாலமாக அகற்றப்படாமல் தேங்கிக் கிடந்த கழிவுகள் கடந்த வாரம் ஒருவாறு அப்புறப் படுத்தப்பட்டன.

யாழ். மாநகரசபை ஊழியர்களின் கடும் முயற்சியினாலும் உழைப்பினாலும் கிடங்குகளில் இருந்து கழிவுகள் வெளியேற்றப்பட்டன.

கழிவுகள் வெளியேற்றப் பட்டதை அடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் சேரும் மலசலம் உட்பட சகல கழிவுகளும் தற்போது தடங்கல் இன்றி நிலத்தடி வடிகால்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன

யாழ். ஆஸ்பத்திரியில் நாளாந்தம் சேரும் கழிவுகள் அங்குள்ள கழிவு சேமிப்புக் கிடங்கில் சேகரிக்கப்பட்டு இயந்திரங்களின் உதவியுடன் அங்கிருந்து நிலத்தடி வடிகால் குழாய்கள் மூலம் பண்ணைப் பகுதியில் உள்ள இந்தப் பாரிய கிடங்குகளுக்குள் செலுத்தப்படுவது வழக்கம். பின்னர் அங்கிருந்து அக் கழிவுகள் கடலில் பாய்ச்சப் படும்.

கடந்த சுமார் 10 ஆண்டுகளாக யுத்த நிலைமைகள் காரணமாக பண்ணைப் பகுதியில் உள்ள கழிவு சேமிப்புக் கிடங்குகள் பராமரிப்பின்றிக் கிடந்தன. அவற்றில் கழிவுகள் தேங்கின. இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பண்ணைப் பகுதி மக்கள் நடமாட்டமற்ற சூனியப் பிரதேசமாக விளங்கியதால் பராமரிப்புப் பணிகள் செய்யப்படவில்லை. அத்துடன் இக் கிடங்குகளில் சேரும் கழிவுகளை கடலுக்குள் பாய்ச்சுவதற்காக அங்கு பொருத்தப்பட்டிருந்த இயந்திரங்களும் நாளடைவில் பகுதி பகுதியாகக் களவாடப் பட்டன.

இந்நிலைமையால் யாழ். ஆஸ்பத்திரியில் கழிவுகளை அகற்றும் பணிகள் ஸ்தம்பித்தன.

பண்ணையில் உள்ள கிடங்குகளில் கழிவுகள் தேங்கியதால் ஆஸ்பத்திரியில் சேரும் கழிவுகளை அங்கு செலுத்துவதில் தடங்கல் ஏற்பட்டது.

ஆஸ்பத்திரி கழிவு சேமிப்புக் கிடங்கில் இருந்து செலுத்தப்பட்ட கழிவுகள் நிலத்தடி வடிகால்களின் வெடிப்புகள் ஊடாக இடை நடுவில் தரைக்குமேல் வெளியேறி சுகாதாரத்துக்கு பங்கம் விளைவித்த சம்பவங்களும் இடம் பெற்றன.

இந்த நெருக்கடி நிலை தொடர்பாக யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகம் யாழ். மாநகர சபையுடன் அடிக்கடி தொடர்பு கொண்டுவந்த போதிலும் பண்ணைப் பகுதிக்குச் சென்று கிடங்குகளைத் துப்புரவு செய்ய முடியாது போயிருந்தது.

தற்சமயம் இந்த 5 பாரிய கிடங்குகளிலும் தேங்கிக் கிடந்த கழிவுகள் யாழ். மாநகர சபை ஊழியர்களால் கடும் சிரமத்தின் மத்தியிலும், அசௌகரியங்களின் மத்தியிலும் ஒருவாறு அகற்றப் பட்டுள்ளன.

(ஐ-15)

## சாவகச்சேரியில் வியாழனன்று இலவச மருத்துவ பரிசோதனை

தென்மராட்சி ஓக. 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு வாய்ப்புற்றுநோய் சலரோகம், இரத்த அமுக்தம், கண் பரிசோதனைகளை எதிர்வரும் வியாழக்கிழமை காலை முதல் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தவுள்ளன.

இப் பரிசோதனைகளை யாழ். போதனா வைத்திய சாலை சிரேஷ்ட பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி உ. சிவபாலசுந்தரம், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி எவ். ஆர். அக்பர் மற்றும் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் ஆகியோர் நடத்துவர் என லயன்ஸ்கழக செயலாளர் தெரிவித்தார். (ஐ-117)

## நூலகத்தைத் திருத்த நிதி உதவி

திருநெல்வேலி, ஓக. 18

திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள பொது நூலகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகம் சபையின் நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்துள்ள இப்பொது நூலகத்தை திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-135)

## செயலகத்துக்கு உள்ளக தொலைபேசி

நவாலி, ஓக. 18

யாழ். செயலகத்தின் சகல பிரிவுகளுக்கும் பொருத்தப் பட்டிருந்த நவீன உள்ளகத் தொலைபேசிகள் கடந்த வாரம் முதல் செயற்படத் தொடங்கியுள்ளன.

(ஐ-100)

# உலகச் சைவ மாநாடு டிசம்பரில் தஞ்சாவூரில்

## ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கலாம்

கொழும்புத்துறை, ஓக. 18

எதிர்வரும் டிசம்பர் மாதம் 19 ஆம், 20 ஆம், 21 ஆம் திகதிகளில் தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் காசித் திருமடத்தோடும், லண்டன் உலகச் சைவ பேரவையோடும் இணைந்து ஆறாவது உலகச் சைவ மாநாட்டை தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தவுள்ளது.

இம்மாநாட்டில் பேராளர்களாகப் பங்கேற்கவும் ஆய்வுக்கட்டுரை அளிக்கவும் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை மாநாட்டு அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

முழு ஆய்வுக்கட்டுரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

சைவ சித்தாந்தம், சைவ சமயம், சைவ நூல்கள், சைவத் திருவிழாக்கள், சைவத் திருக்கோயில்கள், கலையும் பண்பாடும், சித்தர்கள், சைவத்திருமடங்கள், சிவமூர்த்தங்கள், திருமுறைகள் ஆகிய அமர்வுத் தலைப்புகளில் ஒன்றைக் குறித்து அமைப்புக்குழு சிறப்புற அமர்வுகளை அமைக்கத்தக்க வகையில் ஆய்வுக்கட்டுரையின் சுருக்கத்தை இருநூறு சொற்களுக்கு மிகாத அளவில் தட்டச்சு செய்து நிறைவு செய்யப்பெற்ற பதிவுப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முழு ஆய்வுக் கட்டுரையாளர் ஒவ்வொருவருக்கும் தங்கள் கட்டுரையைப் படிக்க இருபது நிமிடங்களும், தொடர்ந்து வினா விடைக் கலந்துரையாடலுக்கு பத்து நிமிடங்களும் அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் ''முனைவர் க. பாஸ்கரன், அமைப்புச் செயலாளர், தத்துவமையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்— 613 005, இந்தியா' என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

ஆறாம் உலகச் சைவமாநாட்டில் கலந்து கொள்ள உள்ளவர்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரையின் சுருக்கம், முழு ஆய்வுக் கட்டுரை வரைபவர்கள் ஆகியோர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குள் முதன்மைப் படிவத்தை நிறைவு செய்து அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-30)

## பிரதேச சபை ஆணையாளர் பதவி வெற்றிடம்

திருநெல்வேலி, ஓக. 18

திருநெல்வேலியில் உள்ள நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விசேட ஆணையாளர் பதவி கடந்த சில மாத காலமாக வெற்றிடமாக உள்ளது. முன்னர் இங்கு விசேட ஆணையாளராகக் கடமையாற்றிய நல்லூர் பிரதேச செயலர் திருமதி கமலா சிவசிதம்பரம் திருகோணமலை வடக்கு — கிழக்கு மாகாண சமூக சேவைகள் பிரதிப் பணிப் பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அதன் பிறகு இதுவரை விசேட ஆணையாளர் எவரும் இங்கு நியமிக்கப்படவில்லை

(ஐ-135)

## நெடுந்தீவில் 10 பேருக்கு தையல் மெசின்

நெடுந்தீவு, ஓக. 18

நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வதியும் 10 பேருக்கு சுயதொழில் முயற்சித் திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், முன்னாள் உதவி அரசாங்க அதிபர் சி. அருளப்பு ஆகியோர் நேற்று இவற்றை வழங்கினர்.

(ஐ-111)

# அரச ஊழியரைப் பிந்த வைக்கும் வடமராட்சி - யாழ். பஸ் சேவை!

வடமராட்சிப் பகுதியில் இருந்து யாழ். நகரப் பகுதிக்கு கடமைக்குச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கிரமமாகவும் நேரத்திற்கும் கடமைக்குச் செல்லமுடியாது பல சிரமங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சேவை பருத்தித்துறைப் பிரிவினரின் போக்குவரத்து ஏற்பாடு காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

நீண்டகாலத்துக்குப் பின் வடபகுதியில் போக்குவரத்துச் சபையினரின் பஸ் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டும் அரசபணியாளர் ஒழுங்காகவும், நேரத்துக்கும் கடமைக்குச் செல்ல முடியாதுள்ளது என்றால் அது வேதனைக்குரியதே.

அரசபணியாளர்க்கென பயணிகளின் முயற்சியால் வடமராட்சி பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலாக இராணுவப் பாதுகாப்புடன் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இராணுவ சோதனை நிலையங்களை இலகுவில் தாண்டிச் செல்வதற்கும் இடையில் தரித்து பயணிகளை ஏற்றாமல் செல்வதற்கும் வசதியாகவே இராணுவப் பாதுகாப்புடனான இச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது.

கடுகதி சேவைக்கு சமமாக ஓடிக்கொண்டிருந்த இப் பஸ்

### குறையும் நிறைவும்

வண்டி தற்போது சாதாரண பஸ் வண்டியையும் விட மோசமான நிலையில் ஓடிக்கொண்டிருக்கிறது. பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரையுள்ள அத்தனை பஸ் தரிப்பு நிலையங்களிலுமே பஸ் வண்டி தரித்துச் செல்கிறது.

பருத்தித்துறையில் இருந்து புறாப் பொறுக்கிவரை உள்ள தரிப்பிடங்களில் இருந்து அரச பணியாளர்களை ஏற்றிக் கொண்டு புறப்படும் பஸ் வண்டி யாழ்ப்பாணம் வரை பணியாளர்களை இறக்குவதற்காகத் தரிக்க வேண்டுமே தவிர பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தக் கூடாது என்பதே ஆரம்ப ஏற்பாடு அச்சுவேலியில் இருந்து வேறு பஸ் சேவைகள் இடம்பெறுவதால் இந்த ஒழுங்கு செய்யப்பட்டது.

ஆனால் தற்போது இது சகல தரிப்பிடங்களிலும் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றியிறக்கும் நடவடிக்கையிலே ஈடுபட்டுள்ளது. சாரதி நடத்துநரின் இப் பொறுப்பற்ற செயலால் ஏனைய பயணிகளும் இராணுவப்பரிசோதனை சாவடிகளில் இறங்கி ஏற விருப்பின்றி ''ஓடு மீன் ஓடி உறு மீன் வருமளவும்'' என்பது போல எத்தனை மினிபஸ், பஸ் வண்டிகள் முன்னுக்குச் சென்றாலும் அவற்றையெல்லாம் போகவிட்டு, இராணுவ பாதுகாப்பு பஸ் வண்டியை எதிர் பார்த்துக் காத்திருந்து அதில் ஏறுகின்றனர். இச் செயலால் பஸ்ஸில் நெருக்கடி மிகுதியாவது மாத்திரமல்ல தேவையற்ற தாமதங்களால் பஸ்லாம் குறிக்கப் பட்ட நேரத்தைவிட மிகத் தாமதமாகவே யாழ்ப்பாணத்தைச் சென்றடைகிறது. காலை 7.15 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பஸ்வண்டி, பஸ்நிலையத்தில் இருந்து அரைமணித்தியாலத்திற்கு மேல் தாமதித்துப் புறப்படுவது மாத்திரமல்ல பஸ்தரிப்பு நிலையங்களிலும் பிரயாணிகள் அதிகம், நெருக்கடி நிலைகாரணமாக நீண்ட நிமிடங்கள் தாமதித்துத் தாமதித்துச் செல்வதால் காலை 9 மணிக்கு மேலேயே யாழ். பஸ் நிலையத்தைச் சென்றடைகிறது.

இதனால் 8 அல்லது 8 30 மணிக்கு கடமைக்குச் சமுகம் கொடுக்க வேண்டிய அரச ஊழியர்கள் தினமும் (கையெழுத்துக் கொப்பியில் சிவப்புக்கோட்டுக்கு கீழேயே) 30 நிமிடங்களுக்கு மேல் பிந்தியே கையொப்பமிட்டு கடமையைத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர்.

இச்செயலால் இவர்கள் அடிக்கடி நிர்வாக உயர்மட்டத்தின் சீற்றத்திற்குள்ளாக வேண்டிய நிலையிலேயே உள்ளதாக மிகவும் கவலை படுகின்றனர்.

இதேபோலவே யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்குச்செல்லும்போதும், சமநேரத்தில், கோப்பாய் அச்சுவேலிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து குறுகிய பஸ் சேவைகள் இருந்தபோதும், அச்சுவேலிக்குட்பட்ட சகல பஸ்தரிப்பு நிலையங்களிலும் ஏறி இறங்கும் பிரயாணிகளை ஏற்றி, இறக்கி தாமதப்படுத்தி மாலை 5 மணிக்கு புறப்பட்டு இரவு 7 மணிக்கே இந்த பஸ் பருத்தித்துறையை சென்றடைகிறது. இதனால் பருத்தித்துறையில் இருப்போர் பொழுது இருண்ட பின்னரே வீடுகளுக்கு செல்ல வேண்டியுள்ளது.

மொத்தத்தில் சுமார் 6 மணித்தியாலங்களை வெறும் பொழுதாக வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் வீதியிலேயே கழித்து காலத்தைப் போக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்டோர் முறைப்படி சேவையை நடத்துவார்களேயானால் வடமராட்சி அரச பணியாளர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்கு சமுகமளிப்பதோடு. மேலிடத்தின் சீற்றத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முறைப்படி சேவை நடத்தப்படும் பட்சத்தில் 55 நிமிடங்களில் பஸ் வண்டி யாழ்ப்பாணத்தைச் சென்றடைய முடியும்.

- கு. கதாதரன

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புலிகளுடன் அரசு நடத்திய பேச்சுத் தொடர்பான

# ஆவணங்களை சமர்ப்பிக்காவிடில் ஐ.தே.க. போராட்டம் நடத்தும்

## ரணில் எச்சரிக்கிறார்

கொழும்பு, ஒக. 18

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடத்திய பேச்சுக்களின் ஆவணங்களை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஐ. தே. க. எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தும்.

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் விடுத்த முக்கிய எச்சரிக்கையை அரசாங்கம் இராணுவத்துக்கு தெரிவிக்க தவறியுள்ளது. அதன் மூலம் அரசு இராணுவத்துக்கு பெரும் தவறிழைத்துள்ளது.

பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னறிவிப்பாக எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். இந்த எச்சரிக்கையை அரசு மறைக்காமல் இருந்திருந்தால், ஏப்ரல் 19 ஆம் திகதி தாக்குதலைபடையினர் எதிர் கொண்டிருக்க முடியும்.

பேச்சுக்கள் தொடர்பான ஆவணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பல தடவைகள் கோரினோம். ஆனால் அரசு மௌனம் சாதித்து வருகிறது-

அரசாங்கம் இனியும் அந்த ஆவணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தவறுமானால் அரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் —

இப்படி அவர் மேலும்கூறினார். (இ-3-150)

கடந்த 6 மாத காலப்பகுதியில்

# 37 ஆயிரம் பேருக்கு கைதடியில் சிகிச்சை

தென்மராட்சி, ஒக. 18

கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் இவ்வருட முதல் ஆறு மாத காலத்தில் சுமார் 35 ஆயிரம் பேர் வெளிநோயாளர் பிரிவிலும், 2 ஆயிரத்து 100 பேர் வார்ட்டுகளிலும் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பாரிசவாதம், சர்மரோகம், பீநிசம்போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் உட்படப் பலர் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் இந்திரா சத்தியநாதன் தெரிவித்தார். (ஐ-117)

# கலாசார அமைச்சினால் 'கோபுரம்' சஞ்சிகை வெளியீடு

மல்லாகம், ஒக. 18

இந்து ஆலயங்களின் சிறப்புகள் பெருமைகள் என்பனவற்றை வெளிக்கொணருமுகமாக கலாசார அமைச்சினால் 'கோபுரம்' என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

ஆலய நிகழ்வுகளை இச் சஞ்சிகை மூலம் வெளியிட விரும்புவோர் பிரதேச செயலக ரீதியாக உள்ள கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-36)

# குருநகர்ப் பகுதி வீதிகளில் இடிபாடுகள் அகற்றப்படவில்லை

குருநகர், ஒக. 18

பாஷியன் வீதிக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட இரண்டாம் மூன்றாம் குறுக்கு வீதிகளில் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மக்கள் மீண்டும் குடியேறி வருகின்றனர். ஆனால் இப்பகுதி வீதிகளில் கட்டட இடிபாடுகள் அகற்றப்படாமல் உள்ளன. குப்பை கூளங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்துச் செய்ய இடைஞ்சலாக உள்ளது.

இப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது. (ஐ-51)

உழைப்பாளரை இழந்த குடும்பங்கள்

# சுயதொழில் முயற்சியில் ஈடுபட 10 ஆயிரம் ரூபா நிதி உதவி

தென்மராட்சி, ஒக. 18

தென்மராட்சிப் பிரதேசத்தில் உழைப்பாளரை இழந்து மாதாந்த உதவிப்பணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தோர் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுத் தமது வருமானத்தை அதிகரிப்பதற்காக அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் வழங்கப்படவுள்ளது.

நன்கொடை உதவியைப் பெற்று தமது வருமானத்தை பெருக்க விரும்பும் மாதாந்த உதவிப் பணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தோர் தத்தமது பிரிவு கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

அத்துடன் இப் பிரதேசத்தில் சுய தொழில் முயற்சியில் ஈடுபட விரும்பும் ஊனமுற்றோருக்கும் இந்த நன்கொடை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## சீருடை துணிகள்

திருநெல்வேலி, ஒக. 18

யாழ். சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கான இவ் வருடத்திற்குரிய இலவச சீருடைத்துணிகள் விரைவில் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-135)

## பளையில் பஸ் தரிப்பிடம் அமைப்பு

பளை பஸ் நிலையத்தில் புதிய பஸ் தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பஸ் தரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகத்தினர் 33ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# தாய் - சேய் உறவின் பலமும் பாலமுமாக உள்ளது தாய்ப்பால்

## கருத்தரங்கில் வலியுறுத்து

நெடுந்தீவு, ஒக. 18

தாய் சேய் உறவின் பலமாகவும் பாலமாகவும் விளங்குவது தாய்ப்பால் ஆகும். குழந்தைக்கு வேண்டிய அனைத்து சக்திகளும் தாய்ப்பாலில் தேவையான அளவு உள்ளன. எனவே தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதை வெறும் கடமையாக மட்டுமன்றி பலமான உறவுக்குரிய ஒன்றாகவும் கொள்ள வேண்டும்.

உலக தாய்ப்பாலூட்டல் வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய வைத்திய அதிகாரி வை. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

சில தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதை முக்கிய ஒன்றாகக் கருதுவதில்லை. தமது அழகு குலைந்துவிடும் என்று நினைப்பவர்களும் உண்டு. இது ஒரு தவறான கொள்கையாகும்.

தாய்ப்பாலோடு நல்ல ஆரோக்கியத்தையும் அன்பு பண்புகளையும் தன் சேய்க்கு ஊட்டுவதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியையும் தனது பாலூடாக குழந்தைக்கு வழங்கி எதிர்காலத்தில் நல்ல சமுதாயம் உருவாகவும் உதவுகிறாள் என்பதை தாய்மார்களும் கர்ப்பிணிப் பெண்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் பல தாய்மார்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

வைத்திய அதிகாரி திருமதி யோ. யாழினி குடும்பநல சேவையாளர் திருமதி இலட்சுமி ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (ஐ-111)

## வீடு பார்க்கச் சென்றோர் திரும்பவில்லை

வவுனியா, ஒக. 18

முரசுமோட்டைப் பகுதியில் வீடு பார்க்கச்சென்ற சமயம் காணாமற்போன ஐந்து பேரைத் தேடிச்சென்ற உறவினர்கள் அவர்களது இரு சைக்கிள்களையும், உடைகளையும் நேற்றுக் கண்டு பிடித்து எடுத்து வந்தனர்.

இந்த ஐந்து பேரும் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (இ-3-164)

# நவாலி விவசாயிகளுக்கு வியாழனன்று விதை நெல்

யாழ்ப்பாணம், ஒக. 18

நவாலி விவசாய சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் வியாழக்கிழமை உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் வைத்து விதைநெல் வழங்கப்படும் என சம்மேளன செயலாளர் எஸ். ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பதிவு செய்த விவசாயிகள் தமது அடையாள அட்டை சகிதம் கமநல கேந்திர நிலையத்திற்கு வருமாறு கோரப்பட்டுள்ளனர். ஒரு புசல் ரூபா 500 வீதம் வழங்கப்படும்.

நவாலி விவசாய சம்மேளனத்திற்கு 75புசல் விதை நெல் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

# பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளால் பேரழிவு

## விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

வட்டுக்கோட்டை, ஒக. 18

பொன்னாலை, மூளாய் கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் அத்துமீறி பிரவேசிக்கும் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருகின்றன. அவற்றை துரத்திச் சென்றால் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பொது மக்கள் நடமாட முடியாத பகுதிகளுக்குள் சென்று விடுகின்றன. அவற்றை கட்டுப்படுத்தாவிட்டால் எதிர்வரும் கால போகத்தில் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நெல் வயல்களை இரு கிராமங்களிலும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாத நிலைமை ஏற்படும்.

இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேச மட்ட மாதாந்த விவசாயக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விவசாயப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதற்கு பதிலளித்த அக் கிராமங்களின் கிராம உத்தியோகத்தர்கள், அம்மாடுகளை பிடிப்பதற்கு விவசாயிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் பயனளிக்கவில்லை எனத் தெரிவித்தனர்.

ஆகவே மேற்படி மாடுகளை அழித்தாவது விவசாய செய்கையில் ஈடுபட தமக்கு உதவுமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில், இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான 1,800 புசல்விதை நெல்லுக்கு பதிலாக 3—$3\frac{1}{2}$ மாத விளைவு காலமுடைய 600 புசல் விதை நெல் மட்டுமே இப்பகுதிக்கு கிடைத்துள்ளதாகவும்—

விவசாய சம்மேளனங்களினூடாக விவசாயிகளின் தேவையை உறுதிப்படுத்தி இந்த விதை நெல் விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும்—

ஒரு புசல் நெல் ரூபா 500 வீதம் விநியோகிக்கப்படும் எனவும்— தொல்புரம் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த 1,500 விவசாயிகளுக்கு பாரக மண்வெட்டிகள் விநியோகம் செய்யப்படவுள்ளதாகவும்—

200 விவசாயிகளுக்கு உலக உணவு ஸ்தாபனத்திடமிருந்து உதவி வழங்க கோரியுள்ளதாகவும் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

தூர்ந்துபோயுள்ள வெள்ள வாய்க்கால் தடுப்பு மதகுகளைச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விவசாயப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டனர்.

தொல்புரம் கமநல கேந்திர நிலையத்தில் பல ஆண்டுகளாக பெரும் தொகையான தடுப்பு பலகைகள் பாவனை இன்றி இருப்பதாகவும்—

அவற்றை உரிய சம்மேளனங்கள் எடுத்துச் சென்று பயன்படுத்த வேண்டும் எனவும் — கமநல கேந்திர திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.

திருத்த வேலைகளுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு தருவதற்குத் தயாராக இருப்பதாக பிரதேசசெயலர் இக் கூட்டத்தில் தெரிவித்தார். (இ-12)

மீளக் குடியமர்வுக்கான

# கொடுப்பனவு வழங்க ரூ. 2 கோடி கிடைத்தது

குடாநாட்டில் மீள் குடியமர்வு நிவாரணம் வழங்க 2 கோடி ரூபா யாழ் செயலகத்துக்கு கிடைத்துள்ளது என்று யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

மீள் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா நிவாரணமாக வழங்கும் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு தொகுதியினருக்கு இந்த நிதியில் இருந்து கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

தொடர்ந்தும் இக் கொடுப்பனவு வழங்குவதற்கான நிதியை மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

## மின்கம்பம் தகர்ப்பு

திருகோணமலை, நிலாவெளியில் பெரியகுளம் பகுதியில் உள்ள பாரிய மின் கம்பங்கள் கடந்த புதன்கிழமை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

இதனால் நிலாவெளி, இறக்கண்டி, சாம்பல்தீவு, மாறவெவ பகுதிகளுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. (இ-3-150)

## மண்ணெண்ணெய்

நாவலி விவசாய சம்மேளனத்தில் சிறுதானிய மற்றும் தோட்டச் செய்கைகளுக்கு மண்ணெண்ணெய் பெற விண்ணப்பித்தவர்களுக்கு நாளை மறுதினம் புதன்கிழமை மானிப்பாய் எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் வழங்கப்படும் என செயலாளர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டபிள்றீட் ஆர்மோனியம், சிங்கிள்றீட் ஆர்மோனியம் நல்ல நிலையில் விற்பனைக் குண்டு. தொடர்பு: ஜெயம் நகைத்தொழிலகம், குளப் பிட்டிச்சந்தி, கொக்குவில்.
[47386]

விறகுகாலை உபயோகத் திற்குரிய பெரிய தராசு, மூன்று இரும்பு குத்துக்காலு டன் கூடிய விலை கோரு பவருக்கு உடன் விற்பனைக் குண்டு. தொடர்பு: மா. புவ னேந்திரன் ஆசிரியர் (அத்தி யார் இந்துக்கல்லூரிக்கு எதிர் புறமாக)நீர்வேலிமத்தி. நீர்வேலி.
[48987]

### நாடகம் எழுதுவது எப்படி?

50 ரூபாவுடன் நாடகம் பற்றிய பல விடயங்களை அறியலாம். அக்கரைச் சீமை யில் இங்கிலாந்து சென்ற இலங்கையரது சுவையான கதை.மலிவு விலை ரூபா 25 அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியவை.
[48919]

## 35 ஆயிரம் ரூபா நிதி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.18

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் கனகலிங்கம் விமல்ராஜ் என் னும் குழந்தையின் உயிர் காக்கும் சேவைத்திட்டத் துக்கு யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி இன்ரறக்ட் கழகத் தினர் 35 ஆயிரம் ரூபா நிதியை சேகரித்து வழங்கி யுள்ளனர்.

இந்த உயிர் காக்கும் சேவைத்திட்டத்துக்கு ஒரே தடவையில் பெறப்பட்ட ஆகக் கூடிய அன்பளிப்பு இது எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ஐ)

## பிரதி அமைச்சர் வீட்டின் மீது கிரனேட் வீச்சு

கொழும்பு, ஓக. 18

கம்பஹாவில் புனர் வாழ்வு, புனரமைப்பு பிரதி அமைச்சர் றெஜி ரணதுங்கவின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் மாலை கிரனேட் ஒன்று வீசப்பட் டது.

ரணதுங்க வீட்டில் இருந் தார். ஆனால் குண்டுவெடிக் கவில்லை.

அதன்பின் பொலீஸார் அவ ரது வீட்டுக்கு அருகில் வான் ஒன்றை மறித்து சோதனை யிட்டு இருவரைக் கைது செய் தனர்.

அந்த வானில் இருந்த அரச எதிர்ப்பு சுவரொட்டி களை பொலீஸார் கைப்பற் றின. (இ-21-3)

## நூலக சேவையில் ஓராண்டு பூர்த்தி

### 18 - 08 - 97

எமது நூலக சேவை வளர்ச்சி பெற உதவிய அனைவருக்கும் இந் நன்னாளில் இதயம் கனிந்த நன்றிகளும் வாழ்த்துக்களும்.

## லிங் லெண்டிங் லைப்பிரறி


**41, தபாலக வீதி, சாவகச்சேரி.**

இன்று அங்கத்துவம் பெறும் யாவருக்கும் கட்ட ணம் இலவசம்.

**LING LENDING LIBRARY**

(48982)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சபாபதிப்பிள்ளை மயில்வாகனம்

உருவம்: **16 - 08 - 1904**

அருவம்: **19 - 07 - 1997**

அப்புவே! வையத்தில்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்பட்டுள்ளீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

"அன்னை இல்லம்"
இணுவில்.

(49044)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் வீரசிங்கம்

(வேலணை மேற்கு)
(முன்னாள் உரிமையாளர் - புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

மலர்வு: **04–05–1916**

உதிர்வு: **19–07–1997**

**(18–08–1997)**

பாசமிகு குடும்பத்தலைவனாய் பண்பின் உறை விடமாய் நேசமுடன் எமை வளர்த்து ஆளாக்கிய தெய்வமே! உனை நினைந்து வாடுகின்றோம். மீளாத்துயில் கொண்டாலும் உங்கள் அன்பு முகமும் நினைவுகளும் எமது நெஞ்சை விட்டகலாது நிலைத்து நின்று எம்மை வழி நடத்தும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின் றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

118/4, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

(49056)

## மீண்டும் யாழ். நகரில்!
## புதிய சுபமாலா மோட்டோர்ஸ்

17-08-1997 முதல் இயங்குகின்றது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்க ளுக்கு அறியத்தருகின்றோம். மோட்டார் சைக்கிள் கள் மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை எம்மிடம் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**புதிய சுபமாலா மோட்டோர்ஸ்**
**79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

[49055]

## COMPUTER POINT
### ( COMPUTER TRAINING DIVISION )

REGD. No. J/DS/BR/63/97
**No. 28, St. Patrick's Road,**
**JAFFNA.**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**
**97 - 08 - 24, 97 - 08 - 25, 97 - 09 - 01**

**1.) Beginner's Computer Studies**
**Computer Programming in Basic Language**
( Duration - 4 Months )

**2.) Advanced Computer studies**
( Duration - 1 Year )

Lectures by:
**S. R. LOGENDRA ( D. C. A )**
( Systems Analyst, M. C. S. India )

★ G. C. E: O/L, A/L மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்புரிவோர் ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புக்கள் கூடிய செய்முறை பயிற்சி களுடன் நடைபெறும்.

★ வார நாள்களிலும், சனி, ஞாயிறு நாள்களிலும் வகுப்புக்கள் நடைபெறும்.

மேலதிக விவரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி

(49018)

## பிறைற்றின் கல்வி நிலையம்

**சங்கத்தானை சாவகச்சேரி.**

### O/L

**வினா விடை வகுப்புக்கள்**

**ஆரம்பம்: 19 - 08 - 97 செவ்வாய்**
காலை 8 - 00 மணி

**கணிதம்: திரு. N. அருட்சோதிவர்ணன்**
**விஞ்ஞானம்: திரு. N. மகேந்திரன்**

அலகு ரீதியான மீட்டல் பரீட்சைகளும் நடைபெறும்,

- நிர்வாகி

(சி-1339)

## 18 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: **20–05–1920**

உதிர்வு: **01–08–1997**

அமரர்

### பொன்னையா துரைசிங்கம்

அன்பின் இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசமெனும் நீருற்றி
எமை வளர்த்த அப்பாவே!
பாதிவழியில் எமைப் பரிதவிக்கவிட்டு
சென்றனையோ விண்ணுலகம்?
பதினெட்டு நாள்கள் மட்டுமல்ல
பதினெண் ஆண்டுகள் சென்றாலும்
மறையாது உங்கள் நினைவு;
வற்றாத கண்ணீருடன்
வணங்குகிறோம் நாமிங்கே
அடைக உம் ஆத்மா சாந்தியென்று.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(49059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பாண் அரசியல்!

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்து கடந்த சனிக்கிழமையுடன் மூன்று வருடங்கள் முடிவடைந்து விட்டன.

ஆனால் அரசு எதனையும் சாதித்துவிடவில்லை; மக்கள் நலனுக்காக உழைக்கவில்லை; அவர்களை மேலும் கஷ்டமுற வைக்கிறது என்று கண்டித்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அன்றைய தினம் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தியிருக்கிறது.

இலங்கையில் அனேகமாக எல்லா அரசுகளுக்குமே பதவிக் காலத்தில் அரைவாசி கழிந்ததுமே தொல்லை தொடங்கி விடுவது உண்டு. தேர்தல் காலத்தில் அளித்த பெரும் எண்ணிக்கையான வாக்குறுதிகளில் பலவும் நிறைவேற்றப்படாமல் இருப்பது இக்காலப் பகுதியில் அனேகமாக மக்களுக்கு அனுபவரீதியாகத் தெரிய வந்துவிடும். எதிர்க்கட்சி சாதகமாகப் பயன்படுத்தி மக்கள் ஆதரவைத் தனது பக்கம் சுண்டி இழுக்கத் தொடங்கிவிடும்.

அப்படி ஒரு சந்தர்ப்பம் இப்போது ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி சனிக்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டங்களில் பாண் விலை அதிகரித்திருப்பதை முதன்மைப்படுத்தியது. பிரதான சந்திகளில் பாண் துண்டுகளைக் கட்டித் தொங்கவிட்டிருந்தது.

அதாவது பாண் மீண்டும் அரசியல் லாபம் தேடும் பொருளாக மாறியுள்ளது. 1994 ஆம் ஆண்டில் தேர்தல் காலத்தில் இப்போது பதவியில் உள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தனது பிரசாரக் கூட்ட மேடைகளில் பாண் துண்டுகளைக் கட்டித் தொங்கவிட்டிருந்ததை எவரும் மறந்திருக்க முடியாது.

அப்போது, பாணின் விலை தெற்கில் ஐந்துருபாவாக இருந்தது. தாம் பதவிக்கு வந்தால் அந்த விலையை மூன்று ரூபா ஐம்பதுசதமாகக் குறைக்க முடியும் என்று ஐக்கிய முன்னணி பிரசாரம் செய்தது. பதவிக்கு வந்தவுடன் அப்படியே செய்தது. ஆனால் இப்போது பாணின் விலை ஏழு ரூபா ஐம்பது சதம்; யாழ்ப்பாணத்தில் அதன் விலை இன்னும் ஒரு ரூபாயால் கூட.

பாண் விலை மட்டும் அல்ல, தேர்தல் காலத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அளித்த எந்த ஒரு வாக்குறுதியாவது உருப்படியாக நிறைவேறியதாகத் தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி பார்த்துக்கொண்டிருக்குமா? ஆர்ப்பாட்டங்களையும் பிரசாரங்களையும் தொடங்கி விட்டது; இலங்கையின் அரசியல் வழமைப் பிரகாரம்!

முன்னர்—ஐம்பது, அறுபதுகளில், எழுபதுகளில் எல்லாம் இலங்கை அரசியல் அரிசியில் தொங்கிக் கொண்டிருந்தது. அதே போன்று இன்று அதன் அரசியல் பாணில் தங்கியிருக்கும் நிலை உருவாகி வருகிறது!

அப்போது அரிசி; இப்போது பாண்; இலங்கை அரசியல் எப்போது கனதியாக மாறப்போகிறது?

அரசியல்வாதிகள் சொன்னதைச் செய்யும்போதும், சாத்தியமில்லாததைச் செய்யப்போவதாக பொய் சொல்வதை அவர்கள் நிறுத்திக் கொள்ளும் போதுதான்!

---

### கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகு;

# அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தலைவர்களிடையே முரண்பாடு

கொழும்பு, ஓக. 18

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனையில் கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு உருவாக்குவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் தலைவர்களிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் முஸ்லிம் அலகு ஒன்றை கிழக்கில் உருவாக்குவதில் தீவிரமாக செயற்படுவதுடன் அரசுக்கு நெருக்கடியும் கொடுத்து வருகிறார்.

அதே நேரம் — சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் அமைச்சருமான பௌசி கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு உருவாக்கப்படுவதை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் கிழக்கில் தனி அலகை உருவாக்கி அதற்கு ராஜாவாக வர அஷ்ரப் முயற்சிக்கிறார் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். (இ-3-150)

## பஸ் டிப்போவுக்கு புதியஜெனரேற்றர்

தென்மராட்சி, ஓக. 18

வட பிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போவுக்கு மின் வழங்க புதிய ஜெனரேற்றர் ஒன்று எடுத்து வரப்பட்டுள்ளது.

வ. பி. போ. சபை பொது முகாமையாளர் க. சொக்கலிங்கம் கொழும்பில் போக்குவரத்து அமைச்சுடன் தொடர்புகொண்டு இந்த ஜெனரேற்றரை பொறுப்பேற்று இங்கு கப்பல் மூலம் எடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.கவுடன் பேசும்

கொழும்பு, ஓக. 18

அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து ஐ. தே. கவுடன் முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர்கள் இவ்வாரம் பேச்சு நடத்தவிருக்கின்றனர்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனை குறித்து ஐ.தே.க.வின் ஆதரவு பெற வேண்டியுள்ளதால் அவர்களுடன் பேச்சு நடத்தப்படவிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு ஒன்றை உருவாக்க முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி எடுப்பதன் ஓர் அங்கமாகவே முஸ்லிம் காங்கிரஸ் ஐ தே. கவுடன் பேச்சு நடத்தவிருக்கிறது என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-150)

## தீர்வுயோசனையின் சட்டநகல் தெரிவுக்குழு உறுப்பினருக்கு

கொழும்பு, ஓக. 18

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் சட்டநகலாக நாடாளுமன்ற தெரிவுக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

இந்த சட்டநகலைத் தயாரிக்கும் பணி தற்சமயம் நடைபெறுவதாகவும்—

விரைவில் அந்த நகல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் ஆலோசனை கோரப்படும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

"சட்டநகல் கைக்கு வரட்டும். அதன்பின் அதுபற்றி முடிவை அறிவிப்போம்" என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (இ-3-150)

## நல்லூர் பிரதேச சனசமூக நிலையங்களுக்கு உதவிப் பணம்

நல்லூர் பிரதேச சபை பிரிவில் இதுவரை 16 சனசமூக நிலையங்கள் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான உதவி நன்கொடைப் பணத்தைப் பெற்றுள்ளன.

இப் பிரிவில் மொத்தம் 41 சன சமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதுவரை உதவி நன்கொடையைப் பெறாத சனசமூக நிலையங்கள் தமது செயற்பாடுகள் பற்றிய ஆவணங்களை சபை அலுவலகத்தில் சமர்ப்பித்து உதவி நன்கொடைப்பணத்தை பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் நல்லூர் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இப்பிரிவில் யுத்த கால அனர்த்தங்களின் போது சேதமடைந்த, சொத்துக்களை இழந்த சனசமூக நிலையங்களுக்கு அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் உதவித் திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்கான திட்டம் ஒன்று நல்லூர் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-135)

## புத்தகமும் செங்கல்லும் திட்டம்

கொழும்பு, ஓக. 18

யாழ். நூலகத்தை புனரமைக்கும் நோக்குடன் வெண்தாமரை இயக்கம் மேற்கொள்ளவுள்ள புத்தகமும், செங்கல்லும் என்னும் திட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி அனுராதபுர மகாபோதிக்கு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வைபவ ரீதியாக இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பார். (இ-3)

## வீடுகள் சேதம் அடைந்த 679 ஆசிரியர்களுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

சேதமடைந்த வீட்டுக்கான நஷ்டஈட்டைப் பெற யாழ். மாவட்டத்தில் கடமை புரிந்த 679 ஆசிரியர்கள் தகுதியுடையவர்கள் என வடமாகாணப் புனர்வாழ்வு அதிகாரசபை அறிவித்துள்ளது

ஜனாதிபதியின் உத்தரவைப் படுத்து விரைவில் அவர்களுக்கான நஷ்டஈட்டை வழங்க அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

விண்ணப்பத்துக்குரிய ஆசிரியர்கள் கடமைக்கு திரும்பி விட்டார்களா? அல்லது இல்லையா? என்பதை எம்மால் நிச்சயமாகக் கூற முடியாது என வடமாகாணப் புனர்வாழ்வு அதிகார சபை தெரிவித்தது (இ-3)

## துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இளைஞர் ஒருவரின் சடலம்

### யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

கொக்குவில் மேற்கில் நேற்று முன்தினம் இடம் பெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாக இனம் தெரியாத ஒருவரின் சடலம்நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் யாழ். பொலீஸாரால் ஒப்படைக்கப் பட்டது.

சுமார் 22 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலத்தின் மார்பு, கன்னம், தோள் மூட்டின் கீழ்ப்பகுதி, கை ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

சடலம் இனம் காணும் பொருட்டும், மரணவிசாரணையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

அதேசமயம் கொக்குவில் மேற்கில் நேற்று முன்தினம் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது கைக்குண்டுகளை வீசி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் —

படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் ஒரு விடுதலைப்புலி உறுப்பினர் கொல்லப்பட்டார் என்றும் —

அவரிடம் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும், 4 கைக்குண்டுகளும், சயனைட் வில்லை ஒன்றும் கைப்பற்றப்பட்டன என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-5-15)

## எழுதுநர் இல்லாது இயங்கும் யாழ். மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடமையாற்றுவதற்கு எழுதுவினைஞர்கள் இல்லாததால் நீதிமன்றக் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் மே மாதம் முதல் யாழ் நீதிவான் நீதிமன்றம் தற்போது இயங்குகின்ற கட்டடத்தின் மேல் மாடியில் செயற்பட்டு வரும் இந்த நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியும், பதிவாளர் ஒருவரும், சுருக்கெழுத்தாளர்களும், சிற்றூழியர்களும் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

தற்போது இந் நீதிமன்றத்தில் சிவில் வழக்குகள் அதிகரித்து வருவதாலும் எழுதுவினைஞர்கள் இல்லாத நிலை இருப்பதாலும்யாழ் மாவட்ட நீதிமன்றம் சரிவரத் தனது நீதிமன்றக் கடமைகளைச் செய்ய முடியவில்லை என்று கூறப்படுகின்றது.

இதனைவிடத் தளபாட வசதிக் குறைவு, மழை பெய்தால் ஒழுகும் நிலை என்பன போன்ற பல குறைபாடுகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கல்விக் கல்லூரி நேர்முகப பரீட்சை

மட்டக்களப்பு, வவுனியா கல்விக்கல்லூரிக்கு 1997 - 98 கல்வி ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ். கல்வித் திணைக்களம் வலயம் — ஒன்று அலுவலகத்தில் நடைபெற்றது. கணிசமானோர் அங்கு சமுகமளித்திருந்தனர்.

இந்த நேர்முகப்பரீட்சை இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும். ஏற்கனவே அழைப்புக்கடிதங்கள் கிடைத்து நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர்கள் இன்றும் நாளையும் உரிய ஆவணங்களுடன் காலை 9. 00 மணிக்கும் 5. 00 மணிக்கும் இடையில் சமுகமளிக்குமாறு கோரப் பட்டுள்ளது.

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

நாளை 19 ஆம் திகதி நடைபெற இருந்த வலிகாமம் வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது (இ)

## கசிப்பு வேட்டை

யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, தாளையடி ஆகிய பகுதிகளில் கடந்த வெள்ளியன்று கசிப்பு வேட்டை நடத்தினர்.

சட்டவிரோதமாக கள், கசிப்பு விற்பனை செய்யப்படும் இடங்களில் வீடு வீடாகச் சோதனை நடத்தப்பட்டது. (ஐ-117)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## நல்லூரா வழிகாட்டு!

எழிலான நல்லூரா இந் நாட்டு
எல்லோரது வாழ்விலும் வழிகாட்டு
பொழிலான மயிலேறி பழியோட்டு
புது வாழ்வை தமிழருக்கு நிலை நாட்டு
தமிழான கடவுளே அருள் கேட்டு
தாள்களைப் பணிகிறோம் ஒளி காட்டு
அமிழ்தான தமிழிலே உன் பாட்டு
ஆக்கியே வணங்குகிறோம் வழிகாட்டு!

—தமிழானந்த பாரதி

### நாளை

**ஆவணி 3**

செவ்வாய்க்கிழமை

திதி: பிரதமை
பிற்பகல் 3.14 வரை.
நட்சத்திரம்: சதயம்
பின்னிரவு 12.50 வரை.
சுபநேரம்: 10.35 -12.05
ராகுகாலம்: 3.05 - 4.35
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமை மீறலை நிறுத்த கனேடிய அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்

## கூட்டணி எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஒக. 18

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை நிறுத்தும்படி இலங்கை அரசை வலியுறுத்துமாறு கனடா அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடா சென்றுள்ள மட்டக்களப்பு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

கனடா நாடாளுமன்ற உறுப்பினரும், வெளிவிவகார அலுவல்கள் குழுவின் பிரதிநிதியுமான பில் கிரகாமை சந்தித்து இலங்கை நிலைவரம் குறித்து அவர் பேச்சு நடத்தினார்.

இலங்கையில் தமிழ் மக்கள் கைது செய்யப்படுதல், பின்னர் காணாமல் போதல் — சித்திரவதை மற்றும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படல் — ஆகிய மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. அவற்றை நிறுத்த இலங்கை அரசுக்கு கனடா அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இலங்கையில் நிரந்தர அமைதியைக் கொண்டுவரக் கூடிய பேச்சுகள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் மேற்கொள்ளப்படவேண்டும். விடுதலைப் புலிகளைத்தவிர்த்து பேச்சுக்கள் நடத்துவதால் பயன் இல்லை. இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3-150)

## புளியங்குளத்தில் தாக்குதல்

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை துருப்புக்கள் மீது புளியங்குளம் பகுதியில் விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

இதையடுத்து விமானப் படை விமானங்கள் புலிகளின் மோட்டார் நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

திருநெல்வேலி தேடிவரும் வடபகுதி மக்கள் நன்மை கருதி யாழ். பஸ்நிலையம் முன்பாக இன்று 18-08-97 திங்கட்கிழமை முற்பகல் 12 மணியளவில்

மங்களத் திறப்பு விழா

சகல விதமான பாட்டா, DSI, றன்பா, சாண்டில்கள், வெள்ளை, கறுப்பு சப்பாத்துக்கள், செருப்பு வகைகள், வெள்ளை நெற் சூ முதலியவற்றுடன் அறிமுகம் செய்யவந்துள்ள சிங்கப்பூர் பாட்டா (69.90) பெற்றுக் கொள்ள அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பியூட்டி சூ பலஸ்

15A, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

(49051)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

வயது — பறப்பாங் கண்டல்) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

இச்சம்பவத்தில் 15 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் தடைமுகாம் பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதும் — படையினர் பதிலடியாக ஷெல்தாக்குதல் மேற்கொண்டதும் — தெரிந்தவையே.

(இ-164-3)

# தீர்வுத் திட்டத்தை அங்கீகரிக்க அரசியல் நிர்ணய சபையாக நாடாளுமன்றம் மாறும்?

## இந்திய பிரமுகர் பின்னணியில்

கொழும்பு, ஒகஸ்ட் 18

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனையை, நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி, நிறைவேற்ற இந்தியத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் பின்னணியில் இருந்து செயற்படுவதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்தே நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி சாதாரண பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் — கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் அரசின் இந்த முயற்சியில் பின்னணியில் இருந்து செயற்படுகிறார் என்றும் — செய்தி வெளியாகியுள்ளது.

குறிப்பிட்ட அதிகாரிக்கும் ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இந்த விடயம் தொடர்பாக தர்க்கம் ஏற்பட்டதாக வெளிவந்த செய்திகள் தொடர்பாகச் ''சண்டே லீடர்'' ஆங்கில வார இதழின் செய்தியாளர் ரணிலிடம் கேள்வி கேட்டார்.

''ஒரு விருந்தில் அந்த அதிகாரியைச் சந்தித்தேன். நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றும் விடயம் தொடர்பாக அவருடன் எனக்குத் தர்க்கம் ஏற்பட்டது. ஆனால் பின்னர் நிலைமை வழமையானது. இப்போது அந்த அதிகாரியுடன் நல்லாகவே உள்ளேன்.''

இப்படி பதில் அளித்தார் ரணில்.

(இ-150-3)

# 2 ஓட்டங்களால் இலங்கை வெற்றி

கொழும்பு, ஒக. 18

இலங்கை—இந்திய அணிகளுக்கிடையேயான 3போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை அணி 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இறுதிப் பந்துவரை போட்டி விறுவிறுப்பாக அமைந்தது. வெற்றிபெற 9 ஓட்டங்களை இறுதி ஓவரில் பெற வேண்டிய நிலையில் இறுதி ஓவரைச் சந்தித்த இந்திய அணி அந்த ஓவரில் 2 விக்கெட்டுக்களை இழந்ததுடன் 7 ஓட்டங்களையே பெறமுடிந்தது.

நேற்றைய போட்டியில் இலங்கை அணி சார்பில் மாவன் அத்தபத்துவும் இந்திய அணி சார்பில் அசாருதீன், ஜடேஜா ஆகியோரும் சதமெடுத்தனர். ஆட்ட நாயகனாக ஜடேஜா தெரிவானார்.

ஸ்கோர்: இலங்கை அணி 302/4 இந்திய அணி 300/7

(இ-10)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 19 — 09 — 1920

முருகன் அடியில்: 19 — 07 — 1997

அமரர்

வல்லிபுரம் வள்ளியம்மை

[வட்டுக்கோட்டை மேற்கு]

எங்கள் உயிர் இருக்கும் வரைக்கும்
உங்கள் நினைவு எமது உள்ளிருக்கும்
நீங்கள் எங்களுடன் இல்லா விடினும்
நாங்கள் என்றும் உம்முடனேயே தாயே!

எங்கள் அன்பினிய அன்னையின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று காலை வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நடைபெறுகின்றன. நாளை மறுதினம் புதன்கிழமை (20-8-97) எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் தாயின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோர், நேரில் வந்து இரங்கல் தெரிவித்தோர், கடித மூலம் அனுதாபம் தெரிவித்தோர், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர் —

நாம் சோகத்தில் மூழ்கியிருந்தவேளை மரணச் சடங்குகள் குறைவின்றி நிறைவேற பல்லாற்றானும் உதவிய அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும்— எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்தினருக்கும் மற்றும் விதத்தில் உதவிய இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளையினருக்கும் எமது நன்றிகள் பல.

- குடும்பத்தினர்.

28, கைலாச பிள்ளையார் கோயில்
மேற்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி/1340]

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்)

படும்.

வட பகுதிக்கான பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் சேவையில் ஈடுபடும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் அதனால் எழுகின்ற நிலைமையை சமாளிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தயாராகவிருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சு இந்த உறுதிப்பாட்டை யாழ்ப்பாண மக்களுக்கு அளித்துள்ளது.

சர்வதேச சமூகம் இத்தாக்குதல் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகமும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு திரும்பவிரும்பும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து கவலை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு மக்களை ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் வாடகைக்கு அமர்த்திய ''மிஷன்'' கப்பலை விடுதலைப் புலிகள் குண்டு வைத்து தகர்த்தனர்.

அதன் பின்னர் உணவுப் பொருள்களை வடக்குக்கு ஏற்றிச்சென்ற வெளிநாட்டுக்குச் சொந்தமான ''மொறாங் பொங்'' என்ற கப்பலை விடுதலைப் புலிகள் கடத்தினர்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இந்த செயல்கள் கண்டிக்கப்பட்ட போதும் விடுதலைப் புலிகள் அலட்சியமாக இருந்து வருகின்றனர்.

பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்திடமும் அரசாங்கம் கோரிய போதிலும் இந்த முயற்சிக்கு விடுதலைப் புலிகள் தடையாக இருந்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கான பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் சேவையை தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு... இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## விவசாயிகளுக்கு

# காப்புறுதி இழப்பீடு இன்னும் இல்லை

கடந்த வருட காலபோக நெற்செய்கையின் போது பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு இதுவரை காப்புறுதி இழப்பீடு வழங்கப்படவில்லை.

காப்புறுதி உத்தியோகத்தர்கள் கடந்த பெப்ரவரி மாதம் பாதிப்புக்களைப் பார்வையிட்டுச் சென்றபோதிலும் இதுவரை இழப்பீடு வழங்கப்படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை இவ்வருட காலபோக நெற்செய்கைக்கு உரிய வருடாந்த கட்டணத்தை செப்ரெம்பர் மாதத்துக்குள் செலுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

# இலங்கை விமானப்படையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

விமானப்படை இழந்துள்ளது.

போக்கு வரத்து விமானங்களைச் செலுத்துவதற்கே முக்கியமாகப் பெண்விமானிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும்பெண் விமானிகளுக்கு உயர்மட்டப் பயிற்சி அளிக்கப்படும்.

தொடர்ந்து விமானங்களை இழந்துள்ளதால் பல கோடி ரூபா அரசுக்கு நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் இலங்கையில் படைகளில் சேர விரும்புபவர்களை முன்வருமாறு அரசாங்கம் விடுத்த பல வேண்டுகோள்களுக்கு குறைவான அளவு பலனே கிடைத்துள்ளது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இதன் காரணமாக படைத்துறையில் எல்லாப் பிரிவுகளிலும் ஆள் சேர்ப்பு மோசமான பிரச்சினையாகி விட்டது.

புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள படையினர் ஒவ்வொரு ஆண்டும் கடும் ஆள் சேதங்களுக்குள்ளாகிறார்கள்.

இருந்த போதும் கட்டாய இராணுவ சேவை இலங்கையில் இல்லை என்று பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

(இ-3-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 18-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org